ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1966/44 - 2016 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2016.05.13
*1966/44 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் கம்பஹா, அத்தனகல்லை மற்றும் மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திலமைந்த பஸ்நாகொடை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, மே 11.
5/2/2/1212

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 363, வெலிகடமுல்லை கிராம அலுவலர் பிரிவில் வெலிகடமுல்லை எனும் கிராமத்தில் அமைந்துள்ள சபுகஸ்ஓவிட்ட எனும் காணியிலிருந்து 20 ஏக்கர் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : இக்காணியின் மீதித்துண்டு ;
கிழக்கு : இக்காணியின் மீதித்துண்டு ;
தெற்கு : அத்தனகல்லை - கலபிட்டமடை வீதி ;
மேற்கு : இக்காணியின் மீதித்துண்டு.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: சீமாசஹித குருநாகலை வெவிலி நிறுவகம்,
தபால் பெட்டி எண் : 25 இல. 80,
தம்புள்ள வீதி,
குருநாகல்.

05 - 907


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.